


அளவர்/ உதவிவரைவாளர்	
வரைவாளர் நிலை III	
கட்டிட	

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

அக்கரைக்கொடிவேரி ஊராட்சி

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், தூக்கநாய்க்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், அக்கரைக்கொடிவேரி ஊராட்சி மற்றும் கிராமம் புல எண்: 58/2A - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1" =40' (அ) 1:500

இணையவழி விண்ணப்ப எண்:- RWKA74HC தேதி:- 26-06-2023

குறிப்பு:-

மனைப்பிரிவின் பரப்பு	:	2.03½ ஏக்கர் (அ) 8245.00 ச.மீ
கோரிய மனைகள்	:	34
ஒதுக்கிய மனைகள்	:	34
மனைப்பிரிவு எல்லை		
நிலையில் உள்ள சாலை		
ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு	:	(மனைப்பிரிவின்பரப்பு-மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10%
	:	(8245.00 - 1674.33)x10% = 657.07 ச.மீ
பொது உபயோகம் பரப்பு	:	(8245.00 - 1674.33)x0.5% = 32.85 ச.மீ

பொது ஒதுக்கீடு:-

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

(தான ஆவண எண்:-5687/2023 நாள்:-08-08-2023)

மனைப்பிரிவு சாலையின் பரப்பு:- 1674.33 ச.மீ

பூங்கா ஒதுக்கீடு பரப்பு :- 657.07 ச.மீ (10.00%)

(மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி உரிய கணக்கு தலைப்பில் 10% பொது ஒதுக்கிட்டிற்கான தொகை செலுத்தப்பட்டுள்ளது)

பொது உபயோகம்(A) :- 39.99 ச.மீ (0.61%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்க்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

(தான ஆவண எண்:-5688/2023 நாள்:-08-08-2023)

பொது உபயோகம்(B) :- 45.33 ச.மீ (0.69%)

கட்டிட வரம்பு :-

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ விட்டப்படல் வேண்டும்.
9.0மீக்குமேல்-18.0மீவரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விட்டப்படல் வேண்டும்.

மூலை முடக்கு:-

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50x1.5மீ விட்டப்படல் வேண்டும்

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண்-18 ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 (ம) அரசாணை எண்-16 ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020. அரசாணை எண்-181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ன் படி சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும், 0.5% பூமி உள்ளாட்சி அல்லது TANGEDCO க்கும் தானமாக ஒப்படைக்கப்பட்டவை..
2. அரசாணை எண்:181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.
3. அரசாணை எண்:141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும். அக்கரைக்கொடிவேரி ஊராட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) செயல் அலுவலர் / யூனியன் பொறியாளர்/ நகராட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
9. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
11. மனைப்பிரிவினை சுற்றி மனுதாரரால் சுற்றுச்சுவர் (Compound wall) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
12. மனைப்பிரிவின் ஊடே செல்லும் மின் பாதை (LT) மனுதாரர் சொந்த செலவில் சாலை அமைப்பிற்கு ஏற்ப மாற்றி அமைத்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. மூடப்பட்ட கிணறு அமைந்துள்ள இடத்தில் எவ்வித அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட கூடாது, ஏதேனிலும் பிற்காலத்தில் அமைக்கும் பட்சத்தில் விஞ்ஞான முறையில் அமைக்கப்பட வேண்டும்.

SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO: 343/2023

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்

Document certified by R.Ram
Signed by: Assistant Director
Location: Erode
Date: 2023.06.30 10:34

இறுதி ஒப்புதல்

அக்கரைக் கொடிவேரி ஊராட்சி தீர்மானம் எண்: 42/2024 நாள் - 28.02.2024 -ன் படியும் அலுவலக அனுமதியன், 1/2024-2025 நாள். 06.03.2024. படியும் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டம் அக்கரைக்கொடிவேரி ஊராட்சி தூக்கநாய்க்கன்பாளையம் ஒன்றியம்

K. [illegible] 06/03/2024
தலைவர்
அக்கரைக்கொடிவேரி ஊராட்சி